**Workshop on "*Intellectual Property Rights & Innovations*" on 26th April 2022.**














## News Paper Clips

# பாரதியார் பல்கலையில் உலக அறிவுசார் சொத்து தினம்



▶ கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் அறிவுசார் காப்புரிமை மையம் மற்றும் நிறுவன கண்டுபிடிப்பு கவுன்சில் சார்பில் கருத்தரங்கு நடைபெற்றது.

கோவை, ஏப்.27: கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தில் உலக அறிவு சார் சொத்து தினத்தை யொட்டி அறிவுசார் காப்புரிமை மையம் மற்றும் நிறுவன கண்டுபி டிப்பு கவுன்சில் சார்பில் பயிலரங்கு நேற்று நடந் தது. ஆராய்ச்சி மாணவர் கள் மற்றும் பேராசிரியர் களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் நடத்தப்பட்டது. இதில், அண்ணாமலை பல்கலையின் முன்னாள் துணைவேந்தர் மணியன், இந்திய காப்புரிமை அலு வலகத்தின் சென்னை மண்டல பிரிவின் காப்பு ரிமை துணை கட்டுப்பாட் டாளர் அஜித் மணியன் ஆகியோர் பங்கேற்று சிறப் புரையாற்றினர்.

பாரதியார் பல்கலைக் கழகத்தின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம் பாட்டு நிறுவனத்தின் உயிர் அறிவியலுக்கான மையத்தின் இணை இயக்குனர் கதிர்வேலு வாழ்த்துரை வழங்கினார். இதற்கான ஏற்பாடுகளை பல்கலைக்கழக அறிவு சார் காப்புரிமை மையத் தின் இயக்குனர் பரிமே லழகன் மற்றும் நிறுவன கண்டுபிடிப்பு கவுன்சில் இயக்குனர் பொன்பாண் டியன் ஆகியோர் செய்தி ருந்தனர்.

நிகழ்ச்சியில், பரிமே லழகன் பேசுகையில்,"பார தியார் பல்கலைக்கழகம் கடந்த 5 ஆண்டுகளில் அறி வுசார் கொள்கைகளை வகுத்ததுடன் 23 காப்பு ரிமைகளுக்கு விண்ணப் பித்து 8 காப்புரிமைகள் மற்றும் 12 பதிப்புரிமைகள் பெறப்பட்டுள்ளன. தவிர, புதிய ஆய்வுகளின் மூலம் கண்டுபிடிப்புகளை மேற் கொள்ள அனைத்து நடவ டிக்கையும் எடுத்துள்ளது. இது போன்ற கருத்தரங்கு மூலமாக இளம் ஆராய்ச்சி யாளர்கள், பேராசிரியர்க ளிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும்" என் றார்.

தினமணி, 27.04.2022

# பாரதியார் பல்கலைக்கழகத்தில் அறிவுசார் காப்புரிமை குறித்த பயிலரங்கு

**கோவை, ஏப். 26:** கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் உலக அறிவுசார் சொத்துரிமை தினத்தையொட்டி, படைப் பாற்றல் - புதுமை, அறிவுசார் காப்புரிமையின் அடிப்படை கள் என்ற தலைப்பில் பயிலரங்கு செவ்வாய்க்கிழமை நடை பெற்றது.

பல்கலைக்கழக அறிவுசார் காப்புரிமை மையம், நிறுவன கண்டுபிடிப்பு கவுன்சில் சார்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சி யில், அண்ணாமலை பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் எஸ்.மணியன் தொடக்க உரையாற்றினார். காப்பு ரிமை அலுவலக சென்னை மண்டல துணைக் கட்டுப்பாட் டாளர் அஜித் மணியன் முதன்மை உரையாற்றினார்.

டி.ஆர்.டி.ஓ. உயிர் அறிவியல் மைய இணை இயக்குநர் கே.கதிர்வேலு வாழ்த்துரை வழங்கினார். பாரதியார் பல்க லைக்கழகம் கடந்த 5 ஆண்டுகளில் 23 காப்புரிமைகளுக்கு விண்ணப்பித்ததில் 8 காப்புரிமைகள், 12 பதிப்புரிமைகள் பெறப்பட்டிருப்பதாகவும், புதிய கண்டுபிடிப்புகளை மேற் கொள்ள அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருவதாக வும் அறிவு சார் காப்புரிமை மைய இயக்குநர் த.பரிமேலழ கன் கூறினார்.

பல்கலைக்கழக நானோ அறிவியல் துறைத் தலைவரும், கண்டுபிடிப்பு கவுன்சில் இயக்குநருமான என்.பொன் பாண்டியன் உள்ளிட்ட பேராசிரியர்கள், காப்புரிமை பெற் றவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

CS Scanned with CamScanner

# 'உலகளாவிய சிக்கல்களுக்கு தீர்வு காண முன்வர வேண்டும்'

## அறிவுசார் சொத்துரிமை பயிலரங்கில் வலியுறுத்தல்

**கோவை, ஏப். 27–**

உலக அறிவுசார் சொத்து ரிமை தினம் முன்னிட்டு, பாரதியார் பல்கலை அறிவு சார் சொத்துரிமை மையம் சார்பில், 'படைப்பாற்றல் மற்றும் புதுமை – அறிவு சார் காப்புரிமையின் அடிப் படைகள்' என்ற தலைப் பில், நேற்று பல்கலையில் பயிலரங்கம் நடந்தது.

துணைவேந்தர் காளி ராஜ் தலைமை வகித்து நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்.

இதில், அண்ணாமலை பல்கலை முன்னாள் துணைவேந்தர் மணியன் கூறுகையில், " பல்கலை, கல்லூரிகளே அறிவுசார் சொத்துரிமையின் துவக்க மையங்கள். அறிவுசார் சொத்துரிமையின் முக்கி யத்துவம் குறித்த விழிப் புணர்வை, மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்த வேண் டியது கட்டாயம். சிக்க லான உலகளாவிய பிரச் னைகளை எடுத்து, அதற்கு தீர்வு காணும் கண்டுபிடிப் புகளில் மாணவர்கள் ஈடு பட வேண்டும்,'' என்றார்.

இப்பயிலரங்கில், அறிவுசார் சொத்துரிமை பதிவுகள், கட்டண விப ரம், டிஜிட்டல் உலகில் அறிவுசார் சொத்துரிமை திருட்டுக்கள் அதிகரிப்பு மற்றும் பாதுகாப்பு உள் ளிட்டவை குறித்து, முதுநிலை, ஆராய்ச்சி மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

துவக்க நிகழ்ச்சியில், இந்திய காப்புரிமை அலு வலக சென்னை மண்டல பிரிவின் துணை கட்டுப் பாட்டாளர் அஜித் மணி யன், அறிவுசார் சொத்து ரிமை மைய இயக்குனர் பரிமேலழகன், பல்கலை வளாகத்தில் உள்ள டி.ஆர். டி.ஏ., இணை இயக்குனர் கதிர்வேலு, பல்கலை நானோ அறிவியல் துறைத் தலைவர் பொன்பாண்டி யன் உள்ளிட்ட பலர் பங் கேற்றனர்.